# அரும்பிய முத்து

சற்றே நின்று குத்து விளக்கை ஊன்றிப் பார்த்தாள், புவனா. விளக்கைத் துலாம்பரமாகத் துலக்க இரண்டு வாரம் ஆகிறது. இப்பொழுது தேய்த்துவிடலாம் என்று பார்த்தால், பசி வயிற்றைக் கிள்ளுகிறது. விளக்கை விளக்கித் துடைத்துப் பொட்டிட்டு ஏற்றி, பிறகு பூஜையைச் செய்வதானால் ரொம்ப நேரமாகிவிடும்.

எண்ணெயை ஊற்ற விளக்கின் அருகே குனிந்தாள். ஈ ஒன்று திரியில் ஒட்டிக்கொண்டு விழுந்து கிடந்தது. திரியை எடுக்க விளக்கில் கை வைத்த புவனாவுக்கு, என்னவோ தோன்றிற்று. குத்து விளக்கைத் தூக்கிக்கொண்டு கிணற்றடிக்கு வந்து உட்கார்ந்தாள். 'என் காரியமே தலைகீழ் காரியம்' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டாள்.

"நாளைக்கு வைத்துக்கொள்ளக் கூடாதோ இந்த வேலையை? சீக்கிரம் சாப்பிடேன்!" என்றபடித் தாழ்வாரத்திலிருந்த மண் கூஜாவிலிருந்து நீர் சரித்துக் குடித்தான் ரகுபதி. அலுவலகத்திற்குக் கிளம்பிக்கொண்டிருந்தான் அவன்.

"நாளைக்கு வெள்ளிக்கிழமை, விளக்கைத் தேய்க்கக் கூடாது!"

"நாளைக்குத் தேய்த்தால்தானே தலைகீழ்க் காரியம்? இப்பொழுது எதற்காகச் சொன்னாயாம்?"

"ஆமாம், சிரியுங்கள். உங்களுக்கு சாதம் போடுவதற்கு முன்னாடி விளக்கேற்றியிருக்க வேண்டும். காக்கைக்குப் போட்டுவிட்டு, உங்களுக்குப் பரிமாறினேன். இப்பொழுது சாவகாசமாய் விளக்கை ஏற்றப் போகிறேனே, அதற்குச் சொன்னேன்."

"அதான் விடிகாலம் வரவே ஒருதடவை ஏற்றிவிடுகிறாயே?"

"ஆஹா, ரொம்ப வி-டி-கா-லம்பரந்தான் எழுந்திருக்கிறேன் - ஆறு அடிக்க அடிக்க; மகா பாபம்!"

ரகுபதி மறு பேச்சுப் பேசாமல் நகர்ந்துவிட்டான். அசட்டுத்தனமாக வருத்தப்படும் பெண்டாட்டியோடு மல்லுக்கு நிற்க நேரமா இது? ஊரோடு ஒத்துத்தானே இருக்க முடியும் என்று புவனாவுக்குப் பன்னிப் பன்னிச் சொல்லியியிற்றே! வேலைக்காரி வருகிறாள் ஆறரை மணிக்கு; பாற்காரன் வருகிறான் ஏழு மணிக்கு; ஐந்து மணிக்கே எழுந்து இவள் செய்ய வேண்டிய ஜோலி என்ன? எழுந்துவிடுகிறாள்; எழ முடிந்தது என்றால், அது யாரும் தடுத்து நிறுத்தவில்லை. அவளுக்கு ஆறு மணி சுமாருக்குத்தானே விழிப்பு உண்டாகிறது! அவளைச் சொல்லிக் குற்றமில்லை. இரவு பத்து மணி வரைக்கும் குழந்தைகள்கூடக் கும்மாளம் போடும். அப்படிப்பட்ட ஊர்; அத்தகைய சூழ்நிலை. ஊர் அடங்குவதே ரொம்பத் தாமதம். நண்பர்கள் வருவதும், அவர்களைப் பார்க்க இவர்கள் போவதும் . . . எல்லாமே மெள்ளத்தான் நடக்கும். அப்படியிருக்கும்பொழுது, 'கருக்கலில் துயில் விழிக்கவில்லையே!' என்று புவனாவுக்குக் கழுத்து மட்டும் குறை முழுக்குகிறது! இது அசட்டுத்தனம் அல்லாமல் வேறென்ன? 'விடிகாலம் ஹாய்யாகத் தூங்கும் சுகம் இருக்கிறதே, ஆஹா அதை அனுபவிக்கத் தெரியாத அசடு' என்று கேலி பண்ணிச் சமாதானப்படுத்திப் பார்த்தாயிற்று ரகுபதி. கேட்டால்தானே அவள்? மனதைத் தேற்றிக் கொள்ளும் வழியைவிட்டாள். உள்ளத்தை அலைக் கழிக்கும் பாதையிலேயே போகிறாள். எத்தனை விதமாகத்தான் சொல்லுவதாம்!

"கதவைச் சார்த்திக்கொள்," என்றான் ரகுபதி வெளியில் புறப்பட்டவாறு 'உம்' என்றுபதிலளித்தாளே தவிர, புவனாவுக்குத் தெரியும். அவசியமில்லை என்று. கதவை இப்பொழுதே தாழிட்டு விட்டால், மற்ற வேலைகள் எப்படி நடக்கும்? வேலைக்காரி மாவு மில்லுக்குப் போயிருக்கிறாள்; அவள் கொண்டுவரும் மாவைக் கலந்து ஏதாவது பட்சணம் சிற்றுண்டி செய்து வைக்க வேண்டும் . . .

'இப்பொழுது முதலில் நீ சாப்பாடு போடு' என்று இரைந்தது புவனாவின் பசி. 'வெறுமனே விளக்கை ஏற்றி நமஸ்காரம் பண்ணிவிட்டுச் சாப்பிடப் போனால் என்ன?' என்று கூட நினைத்தாள் புவனா. அவளுடைய மாமனாரே சொல்லியிருக்கிறார்: 'விளக்கிற்கு திலகமிட்டு திரிப்போட்டு ஏற்றி, ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்து, தீப லட்சுமியை வணங்கி எழுந்தால் போதும்; பெண்கள் செய்யக்கூடிய பூஜை பிறிதில்லை' என்று கூறியிருக்கிறார். 'அதன்படியே இந்த ஒரு நாளைக்காவது செய்துவிட்டாலோ?' என்று புவனா யோசித்தாள். ஆனால் மனசு கேட்கவில்லை. புழக்கடையில் பொன்னலரி பூத்துக் குலுங்குகின்றது; கை ராசிக்காரி எவளோ நட்ட மரம் அழகிய மலர்களை ஏராளமாக வழங்குகின்றது. பறித்து வந்து பூஜை பீடத்தில் வைத்தாலே தனி சோபை வந்துவிடுகிறது. எந்த வேலைதான் நிற்கிறது, குறைகிறது? இந்தப் பத்து நிமிஷத்து அலுவல்தானா அகப்பட்டது? ஏற்கனவே மகா பாபம், மகா தோஷம் என்று துவளுகிறதே இதயம்!

குத்துவிளக்கைத் தேய்த்துவிட்டு வெய்யிலில் படுக்கப்போட்டாள். வியர்வையினால் அவளுடைய ரவிக்கை நனைந்திருந்தது. அங்கேயே கல்லின் மேல் கழற்றிப் போட்டுவிட்டு, கொடியிலிருந்து வேறொரு ரவிக்கையை உருவி அணிந்தாள். கூடையில் பூப்பறித்து வைத்திருந்தான் பெரிய பிள்ளை. துளசியை மட்டும் கிள்ளிக்கொண்டு வந்தாள் புவனா. 'நாளைக்கு நான்' என்று பூப்பறிக்க முறை போட்டுக்கொண்டு, அண்ணனை ஆள்காட்டி விரலால் மிரட்டி விட்ட இரண்டாவது புதல்வனைப்பற்றி மகிழ்ந்து சிந்தித்தவாறே, குங்குமத்தை உள்ளங்கையில் குழைத்தாள். ஈரம் நீங்கி உலர்ந்திருந்த குத்து விளக்கின் முகங்களில் பொட்டு வைத்தாள். அதை மணையில் கொணர்ந்து இருத்தித் தீபம் ஏற்றிவிட்டு, 'மற்ற விக்கிரகங்களை இன்னொரு நாள் தேய்க்கிறேன்' என்று எண்ணமிட்டவாறே, பூஜை செய்ய உட்கார்ந்தாள்.

"புவனி பாய்! பஹின்!" என்று வாசலில் குரல் அழைத்தது. குஜராத்திப் பெண்மணி ரமாபாய் வந்தாள். கொஞ்சம் ரஸப்பொடி கேட்டாள். சந்தேக நிவர்த்திக்காக ரஸம் செய்யும் பக்குவம் கேட்டுக்கொண்டாள். அத்துடன் பேச்சு நிற்கிறதா? "நாஸ்தா ஆச்சா?" என்று கேட்டாள்.

"இன்றைக்கு இவர் ஏழு மணிக்குப் போகவில்லை; இப்பொழுதுதான் போனார். சமையல் பண்ணிப் போட்டுவிட்டேன். நாஸ்தா செய்யும் பழக்கம் கஷ்டமாகவுமிருக்கிறது. செய்யாவிட்டாலும் சரிப்படவில்லை. இன்று இப்பொழுதே பசி வந்துவிட்டது" என்றாள் புவனா சோர்ந்து சிரித்தபடி.

"இரு, இரு; நான் கொஞ்சம் 'டோக்ரா' கொண்டு வருகிறேன்" என்று அவசரமாகக் கிளம்பினாள் ரமா பாய்.

"வேண்டாம், இதோ பாருங்கள், சாப்பிடப் போகிறேன்; தட்டுகூடப் போட்டு வைத்திருக்கிறேன்" என்று மன்றாடி அவளை நிறுத்தினாள் புவனா.

"குளிச்சாச்சு இல்லையா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாள் ரமாபாய்.

"எட்டு மணிக்கே குளித்துவிட்டேன். டிபனும் செய்ய வேண்டியிருக்கும்போதுதான் குளிக்க நாழியாகும். வியர்த்துப் புழுங்குறிதே - பச்சைத் தண்ணீரில் குளிக்க முடிகிறது!" என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னாள் புவனா; ரமாபாயை ஏறிட்டுப் பார்க்கவே கூசினாள். குளிர் நாளில்கூட இந்தக் குஜராத்தியர் தண்ணென்ற நீரை மொண்டு கொட்டிக்கொண்டு குளிப்பார்கள். அப்புறம் தான் டிபன், டீ. "உன் மாமியார் கூடவா காப்பி சாப்பிட்ட பிறகு குளிப்பார்?" என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். "எங்கள் ஊரில் காப்பிக்கடை ஆறு மணிக்கு முடிந்துவிடுமே!" என்று புவனா சொன்னதுண்டு. இவர்களுக்கு நடுவே வாழ்ந்துகொண்டு, சமையலுக்கிடையே குளியலை முடிக்கப் பாடுபடுகிற புவனாவுக்குச் சிறுமைதான் உள்ளூற.

கொஞ்சம் சிரமப்பட்டு இரவு பத்து மணிக்குப் படுத்துத் தூங்கினால், காலையில் சிரமப்படாமல் சீக்கிரம் கண்விழிக்க முடியும்; அதுதான் நடக்க மாட்டேனென்கிறது. அபூர்வமாகச் சில நாட்கள் இருள் பிரியுமுன்பு எழுந்துவிடுவாள். முயற்சி இனித் தளராது என்று நம்பிக்கையுண்டாகும்; ஆனால், நீடிக்காது அந்தப் பாக்கியம்; முறுக்கு ஏறாத பஞ்சுத்

திரிபோல விட்டுப்போகும். காலங் காலையில் சிலுசிலுவெனத் தென்றற் குளுமை தவழும் ப்ராதக் காலத்தில், கிளுகிளுவென உயிரினங்கள் அனைத்தும் கதிரோனை வரவேற்றும் அரிய பொழுதிலே துயில் நீங்கி எழுவதே ஓர் இனிய அனுபவம் என்பதை அனுபவித்து உணர்த்துங்கூட அதை நிலைநிறுத்திக்கொள்ள இயலவில்லை. இரவு பதினோரு மணிக்குப் படுத்து, காலை ஆறுமணிக்கு எழுகிற பழக்கம்தான் நீடித்தது. மகா தோஷம் என்றும் மாபாதகம் என்றும் மனதில் குறைப்பட்டுக் கொள்ளும் வழக்கம், சவலைக் குழந்தை போலப் போட்டியிட்டுப் படுத்துகிறது.

இராமபிரான் வனவாசம் செய்ய போய்விட்டார்; பாட்டனார் வீட்டிலிருந்து திரும்பி வருகிறான் பரதன் அயோத்திக்கு. தன்னைப் பெற்றவளின் சதியை அறிந்தான். துடித்துக் கதறினான். "இந்தச் சூழ்ச்சியில் நான் உடந்தையாக இருந்திருந்த பட்சத்திற்கு என்னைச் சகல விதமான பாபங்களும் சூழட்டும். கோ வதை செய்த பாபம் சூழ்ந்து கொள்ளட்டும். சிசுஹத்தி செய்த தோஷம் சேரட்டும். பிரும்ம முகூர்த்தத்தில் தூங்குகிறவனை எத்தகைய மாபாதகம் சூழுமோ, அத்தகைய மகா தோஷம் என்னையும் சேரட்டும்!" என்று ரத்தம் கொதிக்க அழுது புலம்பினான்.

'அருணோதயத்தில் தூங்குவது மாபெரும் தவறு' என்று பரதன் சொன்னதாகப் படித்தபோதுதான் புவனா அறிந்தாள் என்பதில்லை. அது எத்தகைய இழிவானது என்பதை மறக்கவொண்ணாமல் உணர்ந்துவிட்டாள் என்பதுதான் உண்மை. சிறு வயதிலேயே பாடங்களிலும், வசனங்களிலும் படித்த அறிவுரைதான் அது. இசைப் பயிற்சிக்காக இருட்டோடு, குளிரோடு எழுந்து பழகியிருந்தாள். ஆனால், இன்று நான்கு குழந்தைகளுக்கு தாயாகி, பொறுப்பு வாய்ந்த இல்லாளாக இருக்கும் நிலையில், அவளுக்கு அந்தப் பழக்கம் இல்லை; ஊரும் உலகமும மாறிவிட்ட கோளாறுதான்.

புவனாவுக்கு இந்த ஊர் கட்டோடு பிடிக்கவில்லை. வேலைக்காரியும், பால்காரனும் வருகிற லட்சணம் ஒரு புறம். ரகுபதியின் வேலை நேரமும், குழந்தைகளின் பள்ளி நேரமும் முரண்பட்டிருக்கும் அவதி இன்னொரு புறம். வருஷத்தில் எட்டு மாதங்கள் கசகசவென்று உடலின் வியர்வையை உண்டாக்கும் சீதோஷ்ண நிலை மற்றொருபுறம். போதாக் குறைக்கு அவளுடைய உடலின் தத்துவமே மாறிப் போயிற்று இங்கே. முன்பு அவள் அறிந்திராத தொல்லைகள் பல இப்போது கிளம்பிவிட்டன. இவ்வளவையும் பொறுத்துக் குடித்தனம் செய்து கொண்டிருக்கையிலே எல்லாம் நேர்த்தியாக நடப்பதாகத் தெரிந்தாலும் - 'எதுவோ ஒழுங்காக இல்லை; எதுவோ சரிவர நடத்தவில்லை' என்று சுவர்க்கோழிக் குரல் காட்டும் மனசு ஒன்று பிரமைப்படுத்துகிறது. 'பின்படுத்து முன் எழும் இல்லாள்' என்னும் இலக்கணத்திற்கு ஒப்ப நடந்தாலும், இலக்கிய அழகு இல்லை என்னும் அதிருப்தி அந்தரங்கத்திலே.

'ஏதோ இந்தப் பூஜையையாவது செய்ய வேண்டியதுதான்' என்று வயிற்றுப் பசியை மறந்து, மீண்டும் பூஜைக்கு அமர்ந்தாள் புவனா.

"புவனம்மா!" என்று அழைத்தாள், அண்டை வீட்டுத் தெலுங்கு மாமி.

"என்ன, வாருங்கள் உள்ளே" என்று புவனா வரவேற்றாள்.

"ஒரு சின்னக் குட்டியாகப் பிராம்மணப் பெண் வேண்டுமென்றாயே! கிடைப்பாள்போல இருக்கிறது; ஆனால், அடுத்தமாதம் முதல் தேதி வாக்கில்தான் வர முடியுமாம். பிகு பண்ணிக்கொள்கிறார்கள் கொஞ்சம்" என்றாள் மாமி.

"அப்பொழுது வந்தாலும் போதுமே; இன்னும் இரண்டரை மாதம் செல்லுமே எனக்கு; அதற்குள் வேலை பழகாதா? பத்தியம் வடித்துப் போடாதா? தேவியின் அருள் எப்படியோ பார்க்கலாம். என் மாமியாரைத் தொல்லைப்படுத்த வேண்டாம் என்று பார்க்கிறேன்" என்றாள் புவனா, அசதியினால் பெருமூச்சுவிட்டு.

"நாங்கள் இல்லையா? சமயத்தில் விட்டு விடுவோமா? ஒரு பயமும் இல்லை. 'சரி' என்று சொல்லட்டுமாம்மா, அவர்களுக்கு?"

"உம், சொல்லுங்கள். இப்பொழுது எல்லா வேலைகளும் செய்துகொள்கிறபோதே, காலையில் ஆறு மணிக்கு எழுந்திருக்கிறேனாம். கூடமாட உதவிக்கு ஒருத்தி வந்துவிட்டால், என் சோம்பல் வளர்ந்துவிடும். மெள்ளவே வரட்டும் அவள்" என்றாள் புவனா, சிரித்து.

"நீதான் சோம்பற்படுகிறவளா? நன்றாயிருக்கு. பதினோரு மணிக்குப் படுத்தால், ஆறு மணிக்கு முன்னே எழுந்திருக்க முடியுமா? உடம்புதான் தள்ள வேண்டாமா? பார், உன் ரவிக்கை ஈரம்; மாற்றிக்கொள்ளம்மா; உடம்புக்கு ஆகாது" என்று பரிவுடன் பகர்ந்தாள் மாமி.

"மாற்றிக் கொண்டுதானிருக்கிறேன், தினமும் அரை டஜன். புழுக்கம் தாங்க முடியவில்லை. எனக்குத்தான் இப்படி என்று நினைக்கிறேன்."

"நீ என்னைவிட வயசில் சின்னவளானாலும், மடி, விழுப்பு, அது, இது என்று அதிகம் பார்க்கிறாயம்மா; வேலை இழுபடுகிறது; நானும்தான் மடியாயிருக்கிறேன் - இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும், இந்த இட்லி, தோசை என்று அரைக்கிற காரியமே உனக்குப் பெயரிய வேலையாச்சு, போ. அடியம்மா, என்னாலாகாது. பூஜை ஆச்சோ? நீயாக வைத்துக்கொண்டிருக்கும் வழக்கம் இது ஒன்று சேர்ந்துகொண்டது. நல்லதுதான்; இருக்க வேண்டியதுதான் பக்தி சிரத்தை; நான் வெள்ளிக்கிழமைகள் மட்டும்தான் பூஜை செய்வேன்" என்று சொல்லிவிட்டு, உள்ளே எட்டிப் பார்த்தாள் மாமி.

"பூஜை இனிமேல்தான் ஆகணும்" என்றாள் புவனா.

"எப்படிச் செய்கிறாய், நான் பார்க்கிறேன்!"

"பார்க்கும்படியாக அப்படியென்ன பூஜை இது?' என்று தடுமாறினாள் புவனா. நல்ல வேளையாக அந்த அம்மணி, "அம்மாடியோவ், மறந்தே போனேன். அடுப்பில் வாணலி போட்டுவிட்டு வந்தேனம்மா; குங்குமம் கொடு, போகிறேன்!" என்று கேட்டு, நெற்றிக்கு இட்டுக்கொண்டே, பரக்கப் பரக்க ஓடியே போய்விட்டாள்.

இந்த விட்டில் நான்கு குழந்தைகள் என்றால், அவள் வீட்டில் ஒன்பது குழந்தைகள். குழந்தைகள் ஒத்தாசை செய்யும். அந்த அம்மாளுக்குச் சொகுசாகத்தான் காரியம் செய்யத் தெரியும். நிதானமாகச் செய்துகொண்டு போவாள். 'இழுத்துப் போட்டுக்கொண்டு' பாடுபடுகிற சுபாவமே இல்லை. அப்படியிருக்க முடியவில்லை புவனாவுக்கு. 'இட்லி, தோசை கொண்டு வா' என்று கேட்கும் தமிழ் நா இருக்கிறது. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்று சொல்லும் தமிழ் மூதுரை இருக்கிறது. 'எடுபிடி வேலைகளை ரொம்ப ஏவாதே! அடுப்படி வேலைக்கு அழைக்காதே; படிக்க வேண்டிய பையன்கள் பார்!' என்னும் ரகுபதியின் கட்டளை இருக்கிறது. ஐந்தாவது பிறக்கப்போகிறதே, பெண்ணாக இருக்குமா?

பசிகூட மறந்துவிட்டது, புவனாவுக்கு. பேறு காலத்தைப் பற்றிய சிந்தனை வந்துவிட்டது. உதவிக்கு ஒரு பிராம்மணச் சிறுமி வந்துவிட்டால், எத்தனையோ சௌகரியம்தான். ஆறு மாதம் நிலைத்திருந்தாலும் போதும். இதற்கு முன்பு வேலைக்கு வந்துவிட்டுப் போனார்களே, ஒரு பையனும் ஒரு பெரியவனும், அவர்களைப்போல அழ வைக்க மாட்டாள் பெண்ணொருத்தி; உடனொத்து இருப்பாள் . . .

இவ்வாறு எண்ணமிட்டவாறே, வாளியில் நீர் இறைத்து, சில துணிகளைக் கசக்கிப் போடத் தொடங்கினாள் புவனா. வெய் ல் வீணாகப் போகிறது. மழைக்காலம்; திடுமென்று மப்புப் போட்டு விடக்கூடும். வேலைக்காரியின் உதவி இதற்கெல்லாம் கிடைக்காது.

உதவிக்காக ஆள் வைத்துக்கொண்டு இதற்கு முன்பு பட்ட அனுபவங்களை அசைபோட்டாள் புவனா. பணம் கொஞ்சம் செலவானாலும் ஆகட்டும் என்று ஒரு பையனை, சாப்பாடு போட்டு அமர்த்தினாள். தையற்காரனுக்குத் துணிகளைத் தைக்கக் கொடுக்காமல் தானாகவே தைக்க முடியும், செலவு கட்டுபடியாகும் என்பது அவள் திட்டம். 'ஐயோ, பாவம்' என்று கருணையுடன் வேலைகளை நயமாகச் சொல்லி, அவனுடைய பிழைகளை அனுதாபமுடன் மன்னித்து, 'சிறு பிள்ளையாச்சே!' என்று ஆதரவாயிருந்தாள். கடைசியில் அந்தச் சிறுவன் சின்னப் புத்தியைக் காட்டிவிட்டுப போனான்; யாருக்கோ கையாளாக

இருந்து, வீட்டிலிருந்து பொருள்களை வெளியேற்றத் தொடங்கிவிட்டான்; அவனும் வெளியேற்றப்பட்டான். அப்புறம் ஒரு கூத்து. நாற்பது வயசுப் பிராம்மணன் ஒருவன், 'வேலை வேண்டும், வறுமை, பசி' என்று வந்து கெஞ்சினான். அந்தச் சமயத்தில் பிரவசத்திற்கு உதவி செய்யப் புவனாவின் மாமியார் வருவதாக ஏற்பாடு. அதனால் பெரியவனை சமாளிக்க முடியும் என்று அவனையே வேலையில் அமர்த்தினாள், புவனா. அவன் கஞ்சக் கருமி. ரொட்டியைத் தணலில் வாட்டிய பிறகு நெய் தடவாமல், நீரைத் தெளித்து மெது செய்து, 'இதுதான் நன்மை' என்பான். ஒரு அரிசி மணி கீழே சிந்திக் கிடந்தாலும் பொறுக்கி எடுத்து, அரிசி டப்பாவில் போடுவான். ஒரு பருப்புக் கிடந்தாலும், அது கடலைப் பருப்பா, துவரம் பருப்பா என்று பார்த்து அதற்குரிய டப்பாவில் சேர்ப்பான். குருவியோ எறும்போ கொண்டு போகட்டும் என்று புவனா சொன்னாலும் கேட்க மாட்டான். இப்படி ஒரு பொறுக்குப் புத்திக்காரன் அசமஞ்சமாக வேலையைச் செய்துவிட்டு ஒரு மாதத்திற்குக் கடனைத் தீர்த்துக்கொண்டு போனான்.

அந்தப் பையனும் சரி, பெரியவனும் சரி, பீடி குடிக்கும் பழக்கம் வைத்திருந்தார்கள் என்பதைப் பிறகு அறிந்து கொள்ள நேர்ந்தபொழுது, புவனா ரொம்ப வருத்தப்பட்டாள். 'அந்த எச்சிற்கைகளை வேலை செய்யச் சொன்னோமே' என்று தலையில் அடித்துக்கொண்டாள். 'என் மடியே எத்தனையோ மேன்மை. நான் குளிக்காமலே செய்வதாயினும் தோஷமில்லை' என்று அப்போது சமாதானப்பட்டுவிட்டது மனம். இப்பொழுதும்தான் அவளுடைய சுத்தத்திற்கும் நியமத்திற்கும் என்ன குறை? பாழும் தூக்கம் பிராதக் காலத்தில் கண்களை அழுத்திப் போட்டுவிடுகிறதே எனும் மனக்குறைதான். நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணாக இருக்கிறாள். பொறுப்பும் வேலையும் ஏராளம். அவசியத்தை ஒட்டியே கருக்கலில் எழமாட்டோளோ? ஆசைப்பட்டும் எழ முடியாமல் தவிப்பாளோ? சங்கற்பம் செய்துகொண்டாலும் அது கம்பங்குழியாக வழுக்குகின்றதே?

அதுதான் புவனாவுக்கு ஆச்சரியம். உணர்ச்சி இல்லாத ஜடமாக அருணோதயத்தில் அவள் தூங்கிவழிந்தாலும் வீட்டில் காரியங்கள் குந்தகமின்றியே நடக்கின்றன. நடக்காமல் என்ன? குளிக்காமலே பகுதிச் சமையல். சாப்பாட்டுக்குப் பிறகு துணிமணி தோய்ப்பது; இப்படி நடக்கிறதே - அடுக்குமா? ஒரு ஈரத்துணியை உலர்த்தாமல் விட்டுவைத்துச் சாப்பிட்டால், ஒரு பிராம்மணரைப் பட்டினி போட்ட பாபம் வந்து சேருமாம்.

'அது அந்தக்காலம். அதிதிகளுக்குச் சாப்பாடு போட்டபின் சாப்பிடவேண்டும் என்ற நியதி இருந்த முற்காலம்! ஈரத்துணியை உலர்த்தாமல் சாப்பிடுவது கூடாது என்றார்கள். துணியை உலர்த்தும் நேரத்தில் யாராவது அதிதி வரக்கூடும், அதற்குள் அவசரம் தகாது என்று சொன்னார்கள்' என ரகுபதி விளக்கியிருந்தான். அதுவும் வாஸ்தவம். ஆனால் பட்டப் பகலில் துணி துவைப்பது மனசுக்கு நன்றாகதானில்லை. காலை வெய்யிலும் வீண் போகிறது. இன்றைக்கு எல்லோருக்குமே சாப்பாடு சீக்கிரம்; சில துணிமணிகளைக் கசக்கிப் போட்டாயிற்று.

புவனா நிமிர்ந்துகொண்டாள். ரவிக்கையை அவிழ்த்துப் போட்டு, அலசி எடுத்து வேறு அணிந்தாள். அணையும் தறுவாயிலிருந்த விளக்குச் சுடருக்கு ஒளி மூட்ட எண்ணெய் ஊற்றிவிட்டு, பூஜை செய்ய உட்கார்ந்தாள் புவனா. மாவு மில்லுக்குப் போன வேலைக்காரி, குழந்தைகளுடன் திரும்பும் நேரம்தான். இடையில் எழுந்திருக்கத்தான் வேண்டுமோ? பத்து நிமிஷம் சலனமின்றி உட்கார முடியாதா?

'அப்பாடி!' என்று நெட்டுயிர்த்தபடித் தொடங்கினாள் புவனா. இத்தனை நேரமும் வேலையாக இருந்துவிட்டு, இப்பொழுது ஆசுவாசுமாக அமர்ந்ததும், குப்பென்று வியர்த்தது; உடல் கணகணத்தது. உட்கார்ந்தவாக்கிலே தூங்கவேணும்போல அயர்வுண்டாயிற்று. கண்களை முடினாள். யாராவது பார்த்தால் 'என்ன பக்தி பரவசம்! சமாதி நிலையோ?' என்று பிரமித்துப் போவார்கள். புவனாவோ கண்களை மூடிய நிலையில் 'ஈசா, ஈசுவரீ' என்று அழைக்கக்கூட மறந்தாள். 'என்னை சுகுமாரியாகப் படைத்துவிட்ட இறைவன், அதற்கேற்ற அந்தஸ்தும் வசதியும் பொருளும் தரவில்லை. ஒரு ஊட்டியோ, குன்னூரோ, குளிர்ந்த ஊராக ஒன்று வாய்க்கக்கூடாதா? வேலை செய்யும் சிரமமே தெரியாமல் என்பாட்டுக்குப்

பார்த்துக்கொண்டு போவேனே? இப்படி வெம்மையில் வாடி அல்லலுகிறேனே?' என்று ஏங்கித் தவித்தது உள்ளம்.

இரண்டுபட்ட நினைவையும் 'நான்' என்னும் உணர்வையும், உடல் அசதியையும் இந்த ஒரிரு நிமிஷங்களிலே கரைத்துவிட்டு, உடலும் மனமும் தெளிந்து, புவனா தெய்வ வழிபாட்டில் முனைந்தாள். தன்னிச்சையாக, தானாக ஏற்படுத்திக்கொண்ட பாணியில் அவள் இந்தப் பூஜையைச் செய்கிறாள். அதில் ஒரு வரிசையிருந்தது - ஆனால் சம்பிரதாயம் இல்லை. முறை இல்லாவிட்டாலும் தவறு இராது என்பதே புவனாவின் திருப்தி. அதுவே அவளுடைய ஆத்ம திருப்தியும் ஆகும். ஒரு விக்கிரகத்துடன், ஒரே ஒரு தோத்திரத்துடன் ஆரம்பித்த பழக்கம், எப்படியோ வலியப் பற்றிக்கொண்டது. வித்து என்பதும், அதற்கு வளர்ச்சி உண்டாவதும் இயற்கையாயிற்றே! அதனால்தானே நினைப்பதும், செய்வதும் நல்லனவாயிருக்க வேண்டும் என்று ஆன்றோர் சொன்னார்! இப்பொழுது குத்துவிளக்கைச் சுற்றிலும் பல மூர்த்திகள்; அவற்றிற்கு ஏற்ற துதிகளைச் சொல்லும் ஆர்வம் புவனாவின் நெஞ்சிலே - இப்படியே அந்த ஆசை இரைவனின் அருளைப் போன்று வந்தது; வந்து வளர்ந்தது. இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பு அவளுடைய உடல் நலன் குலைந்திருந்தது. உள்ளத்தின் திட்டனும் குன்றிப்போயிருந்தது. அன்னையின் நலிவினால் குழந்தைகளும் சிரமப்பட்டு, நோயுற்றன. அப்பொழுது அவளையும் அவள் குடும்பத்தையும் காத்தது கடவுளின் கருணை. அந்த நன்றிப் பொறியிலே மூண்டது பக்தி. பக்தி என்பது அவளுடைய தகுதிக்கு மீறிய சொல் என்றால், பித்து என்று சொல்லலாம். உள்ளத்தில் புது மாறுதல் புகுந்தது. உடற்கூறும் சற்றே மாறுபட்டது. நோயின் பின் வளைவாக உடலில் வியர்வை உண்டாவது சகஜமாகிவிட்டது. பக்தி சிரத்தைகள் பெருகியதால் மடி, ஆசாரம், விழுப்பு என்னும் பாகுபாடுகளை அனுசரிக்கும் முயற்சிகளினால், வீட்டில் வேலைகள் வளர்ந்திருப்பதும் தெரியும் புவனாவுக்கு. அதனால்தான் உடம்பு நலங்குகிறது, விரும்பத்தகாத வியர்வையும் உண்டாகிறது என்று பகுத்தறிவுடன் யோசிக்கவும் புவனாவுக்குத் தெரியும். ஆனால் அவள் விரும்பவில்லை. ஒரு காலத்தில் "எதற்கம்மா இத்தனைப் பெரிய வெள்ளி விளக்கு? ஒரு டாய்லெட் செட் வெள்ளியில் வாங்கிக்கொடேன் எனக்கு!" என்று தாயாரிடம் சொன்னவள்தான். "சம்பந்திகள் காதில் விழப்போகிறது, நீ சுன்னா இரு!" என்று வாயை அடக்கினார்கள். அதை நினைத்தாலே இன்று அவமானமாக இருக்கிறது புவனாவுக்கு. அதே குத்துவிளக்கு இன்று இல்லத்தின் தீபலக்ஷ்மியாயிற்று. 'விளக்கே! திருவிளக்கே! உன்னை தூங்காவிளக்காய் வைத்திருக்க எனக்கு சக்தி இல்லை. ஆனால் எப்பொழுதும் சுடருக்கு இருப்பிடம் நீ. உன்னை அகண்டமாகவே நினத்து வணங்குகிறேன். மூன்று பொழுதுகள் உன்னை ஏற்றி வைக்கிறேன். மூவிருபது நாழிகையும் ஏற்றி வைத்ததற்கொப்ப ஏற்று அருள் செய்வாய்!' என்று அதனிடம் வரம் கேட்கிறாள். இந்த வணக்கமும், துதியும், இதயத்திற்கு இதமளிக்கின்றன. சமையலும் குளியலும் முன்பின் ஆனாலும், சூரியோதயத்தில் சொரணைகெட்டுத் தூங்கினாலும், அந்தப் பிழைகளுக்கு மாற்று இந்த தெய்வ வழிபாட்டில் கிடைக்கிறது என்பதே புவனாவின் நம்பிக்கை.

விளக்கைச் சூழ்ந்திருந்த மூர்த்திகளைத் துதித்துவிட்ட புவனா, எதிரே சுவரில் தென்பட்ட அம்பிகையின் திரு உருவப் படத்தை ஏறிட்டு நோக்கி, அன்னபூர்ணாஷ்டகத்தின் ஒரு பகுதியைச் சொல்லிக்கொண்டு, படத்தின்மேல் புஷ்பத்தைச் செருகிவைத்தாள். தேவியின் கண்களை உற்றுப் பார்த்தாள். புன்னகைத் தவழும் திருமுகத்தை நன்றாகப் பார்த்தாள். அந்தப் படத்தின் தனியழகு வேறு படங்களில் இல்லை; அருமையான படம்; சிநேகிதியொருத்தி பரிசளித்த படம்.

அம்மையின் அருள்வதனத்தைப் பார்த்துக்கொண்டிருந்த புவனா, கணநேரம் வக்கித்துப்போனாள். இது என்ன? அம்மனின் நெற்றியில் இது என்ன புதுமை? வியர்வையா? முதுத்முத்தாக அரும்பியிருக்கிறதே - பளபளக்கிறதே நீர்

மேலே தோத்திரம் சொல்ல நாவு அசையவில்லை. நெஞ்சமும் மறந்துவிட்டது. 'அம்மா! அம்பிகே!' எனத் திகைத்தவளாய், புவனா, தன் கைவிரல்களாலேயே அம்மனின்

நெற்றியின்மேல் கண்ணாடியை வருடினாள். 'அம்மா, தேவி! உனக்குமா வியர்வை?' என்று புவனாவுக்குக் கண்ணீர் சுரந்துவந்தது. ஏனோ வேதனை பொங்கி வந்தது. இது அம்பிகை காட்டும் மாயையா? உள்ளத்தின் பிரமையா? நம்பக்கூடியதாய் இல்லையே இந்த அற்புதம்!

உறுத்து உறுத்துப் பார்த்தாள், பார்த்தாள், பார்க்கிறாள். பொய் அல்ல; கண்கட்டு வித்தை அல்ல. அம்பாளுடைய நெற்றியில் அரும்பு கட்டினாற்போல வேர்வைத் துளிகள்.

சட்டென கண்ணீருக்கிடையே புவனம் மெல்ல சிரித்தாள். அம்பிகையுடன் உரையாடிவிட்ட களிப்பு. 'தாயே, லோக மாதா! உனக்குமா வியர்வை என்று கேட்டேனே, அறிவிலி நான்! கோடிக்கணக்கான குழந்தைகளைக் கண்காணித்து அருள் பாலிக்கும் அன்னையே! ஜகஜ்ஜனனீ! உன்னிடம் என் வீண் குறைகளை முறையிட்டு உன்னைத் தொல்லை படுத்தாமல் இருப்பேனாக. அம்மையே! என் வருத்தங்களும், பொருமல்களும் குறையட்டும்' என்று மனம் உருகினாள் புவனா. பூஜையை முடித்துக்கொண்டு எழுந்துவந்தாள். என்றுமில்லாத உற்சாகம் இன்றைக்கு உண்டாயிற்று.

"அம்மா, இது தூங்கிடுத்து; அது எதிர்வீட்டு அம்மாளைக் கண்டு விளையாடப் போயிடுட்டுது!" என்றபடி வேலைக்காரி வந்தாள், தோளில் குழந்தையும், கையில் தூக்குப் பாத்திரமுமாக. 'சமர்த்துக் குழந்தைகள்!' என்று நன்றியுடன் சொல்லிக்கொண்டு, அவசரமும் அமர்க்களமும் இல்லாமல் மெள்ள உணவு கொண்டாள் புவனா.

** ** **

தான் கண்ட விந்தையை, தான் காணும் இந்த அதிசதயத்தை, கணவனுக்கும் குழந்தைகளுக்கும் சொல்லவேண்டுமென்னும் ஆவலில் இருப்புக் கொள்ளாமல் புவனா தவித்தாள் நெடுநேரம். ஆனால், அப்புறம் அந்தத் துடிப்பு அடங்கிப்போகும்படி எண்ணத்தை மாற்றிவிட்டாள். ரகுபதி எத்தகைய விளக்கம் செய்வான் என்பதை ஊகித்துவிட்டாள் புவனா. அந்த மறுமொழியைச் செவிமடுக்க அவள் விரும்பவில்லை. தன் மனதில் ஒரு பிரமை இருக்கிறது; தன் கண்களால் காண்பதை, பிற புலன்களாலும் காண்கிறாள். அந்த நம்பிக்கையும் தென்பும் வீணாவானேன்? மாயா ஜாலம் போன்று தோன்றும் காட்சி மாயையாகிவிட வேண்டுமா? அருள் பொசியும் அழகுக் காட்சியை அழிக்க வேண்டுமா?

மறுநாளும் புவனாவுக்கு வழக்கம்போல் ஆதங்கம், அவசரம், கெடுபிடி, வியர்வை, அசதி, அனைத்தும் குறையற இருந்தன. தினசரி அலுவல்களில் மாறுதல் இல்லை. ஆனால் உள்ளத்து உணர்விலே மாறுபாடு இருந்தது. பூஜைக்கு உட்காரவேண்டும் என்று நினைத்ததைவிட ஆவல் அதிகம் அடித்துக்கொண்டது. பேனாவைத் தேடியழும் பிள்ளை; புத்தகம் காணாமல் புகாரிடும் தம்பி; அடுத்த வீட்டில் விளையாடிவிட்டுக் கீழே விழுந்து உடம்பில் வலியுடன் வந்து காலைச் சுற்றுகின்ற இடைப்பிள்ளை; அம்மா சும்மா கவனிக்கவேண்டுமென்று அழுகிற கடைப்பிள்ளை; காலைத் தபாலில் வந்த கடிதத்தின் முக்கியப் பகுதியைப் படித்துக் காட்ட வந்து நிற்கும் கணவன்; வாசலிலும் புறக்கடையிலும் கூவும் சேவைக்குரல்கள் - இத்தனை அமளிக்கும் ஈடு கொடுத்துக்கொண்டே, யந்திரமாக இயங்கினாள் புவனா. அந்தரங்கத்தில் தேவியின் பிறைநுதலின் நினைவாகவே இருந்தாள்.

கடைசியில பூஜைக்கு அமர்ந்தாள். ஊன்றி நொக்கினாள் அன்னையின் முகத்தை. நேற்றுபோலவே இன்றைக்கும் அந்த முகம் சிரித்தது, நெற்றியில் வியர்வையை தாங்கியபடி. பெரிய படம், பெரிய முகம், பளிச்சென்று தெரிகிறது.

'அம்மா, இது என்ன கருணை?' என்று இன்ப அலை புரண்டது புவனாவின் உள்ளத்தில். தன்னுடைய சோர்வும், வியர்வைத் தோய்ந்த உடலின் வெப்பமும் ஒடுங்க, குளிர்ச்சி கிளந்தாற்போல ஒர் இனிமை இழைந்தது அவள் கருத்திலே.

ரகுபதியிடமோ, குழந்தைகளிடமோ தான் கண்ட காட்சியைச் சொல்லாமல், தன் மனத்துள்ளேயே இருத்தி, மகிழ்ந்தாள் புவனா.

மறுநாள் அதற்கு மறுநாள், அதே காட்சி, எழிற்காட்சி; விந்தைத் தோற்றம். அதே மனமகிழ்ச்சி இவளுக்கு.

"ரொம்ப புழுகுகிறது; நீ ஏன் சொல்லவே காணோம்?" என்று ரகுபதி கேட்டுவிட்டான்.

"அதற்கென்ன, பெரும்பாடா? நன்னாயிருக்கு! மழையாச்சே என்று நம்ம உடம்பு குளிர்ந்திருக்கிறதா? மனசைத்தான் குளிர்க் குளிர வைத்துக்கொள்ளனும். இரண்டு நாளாச்சு, வெயிலைக் கண்டு. துணிமணிகள் உலராமல் இருக்கின்றன. வராந்தா உலரமாட்டாமல் சேறும் சகதியுமாயிருக்கு; சொல்லி நிற்கக்கூடிய விஷயமா?" என்று பேச்சில் புவனா இடக்கு பண்ணினாள், கள்ளச் சிரிப்புடனே.

அடுத்த நாள் புவனா அம்மனின் முகத்தில் இனியொரு மாறுதலும் கண்டுவிட்டாள். மோவாயிலும் நீர்ப்பசை அன்னைக்கு நெற்றியில் மட்டுமல்லாமல் பரவியிருந்தது. நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும்பொழுது தன் முகத்தில் நீர் கோத்துக்கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ, அதே போன்ற தோற்றம்.

பார்க்கப் பார்க்கப் பரவசமாயிருந்தது. 'எனக்கு என்ன பாரம்? அகிலாண்டகோடி ஜீவராசிகளின் அன்னை, இதோ, வேர்வையரும்ப என் முன் சிரித்துக் கொண்டு நிற்கின்றனளே!' எனப் புவனா குறுகுறுத்தாள்.

ஐந்தாறு நாட்கள் ஓடிவிட்டன. புவனாவுக்குப் புத்துணர்வு கொப்பளித்தது. 'இந்த மழை இப்படிப் படுத்துகிறதே!' என்று அங்கலாய்த்தாளே தவிர, 'என்னால் தாளவில்லையே புழுக்கம்' என்று சொல்லவில்லை. ரவிக்கைகளை மாற்றுவாள். 'இது ஒரு வேலை எனக்கு' என்று அலுக்காமலே.

இப்படி இருக்கும்பொழுது ஒருநாள் கண்ணுக்கு அம்மன் படத்தில் திடல் திடலாக ஒரு சாம்பல் நிறப் பூஞ்சானம் பற்றியிருந்ததுபோலத் தோன்றியது.

'ஐயோ, ஈசுவரீ!' என்று படத்தை எடுத்து, அதன் பின்புறத்தைத் திருப்பிப் பார்த்தாள். மழையின் ஓதம் படிந்திருந்தது அட்டையில். படம் தொங்கிக் கொண்டிருந்த பகுதியில் கவரில் உப்புப் பரிந்து கிடந்தது.

உடனே படத்தின் பின்புறத்து ஆணிகளைப் பிடுங்கினாள் புவனா. மளமளவென்று பிரித்து, படத்தை மெதுவாகத் துடைத்து உலரப் போட்டாள், ஒரு ஓரமாக. எதிரில் தேவியின் படம் இல்லாத பெருங்குறையுடனேயே பூஜை முடிந்தது.

அன்று மாலையிலேயே கடைக்குக் கொண்டு சென்று, படத்திற்கு நல்ல அமைப்பாகச் சட்டமிட்டுக்கொண்டு வந்தாள்.

மறுநாள் பூஜைக்கு உட்கார ஊக்கமில்லை. எனினும் வழக்கம் தவறுமா? தவறக்கூடுமா? அமர்ந்து எதிரே கண்ணோட்டினாள். அவள் - எதிர்பார்த்தபடியே தான் - தேவியின் முகத்திலே வியர்வை இல்லை. ஜீவனுள்ள பெண்மணியாக அம்பாளைக் காட்டிய அம்சத்தைக் காணவில்லை. உலகத்து அன்னை அவள், அனைத்துயிர்களையும் காத்திடும் தாய் அவள் என்று அந்தச் சக்தியின் பெரும் பொறுப்பை உணர்த்திய குறிப் தென்படவேயில்லை, இப்பொழுது. 'நான் நாயகி, அகிலாண்டேஷ்வரி' என்று வெறுமனே உல்லாச பவனிவரும் தேவி அல்லள், வியர்வை துளிக்க அவளும் அலைகிறாள் என்பதை நினைவுறுத்திய முகம், இப்போது காணக் கிடைக்கவில்லை.

புவனாவுக்கு ஏமாற்றமா?

"படம் ஈரந்தாக்கியிருக்கிறதோ, பார்!" என்று ரகுபதி சொல்லக்கூடும் என்பதை வெருவியல்லவோ, தான் கண்ட விந்தையை விளம்பாமல் வாயை மூடிக் கொண்டிருந்தாள்?

இயற்கைப் போக்கில் மர்மம் வெளிப்பட்டுவிட்டதே என்னும் தாபம் புவனாவுக்கு.

ஓரிரு நாட்கள் சஞ்சலம் போகவில்லை. கடைசியில் அன்னையினிடமே முறையிட்டாள். பேசும் சித்திரமாக அந்த மஹா சௌந்தரியைத் தீட்டிய கலையுள்ளம், புவனாவின் உருக்கத்தைப் பார்த்திருந்தால்? . . .

அம்மை பேசிவிட்டாள் போலும். புவனாவின் கலக்கம் தெளிந்தது. 'தேவி, இதுவும் நின் அறிவுரைதானம்மா. முத்துப்போல் அழகு செய்ய வேண்டிய அணிகலன் வியர்வை என உணர்கிறேன். என் உடல் உழைத்துப் பாடுபடச் சீரிய தேக திடம் தா, போதும், தாயே!' என்று வேண்டிக்கொண்டாள் புவனா.

** ** **

"ஏன், ஊட்டியோ ஸிம்லாவோ வேண்டாமா? உன் புவனம் கேட்கவில்லை உன்னை?" என்று இறைவன் கேட்டார் தமது உமையவளை.

இறைவி மஹேசுவரரைப் பார்த்தாள் குறுகுறு என்று. அவருக்குத் தெரியாத அம்பலமா?

பனி முடிய சிகரங்களையும் ஒரு கண் ஓட்டினாள் மஹேசுவரி. "இங்கே வரச் சொன்னாலும் வர விரும்பமாட்டாள், தன் குழந்தைகளைத் தவிக்கவிட்டு. அவள் மனம் மாறிவிட்டது."

"எப்படி மாறிற்றாம் சொல்லேன், தேவி."

'ஹூம்' என்று பெருமிதமாக நெட்டுயிர்த்தாள் மகாதேவி. "பாருங்கள்; நீங்கள்தான். சற்றே காதுகொடுத்துக் கேளுங்கள்; தினமும் அந்தப் பிள்ளை ரகுபதி திருநீற்றையாவது இட்டுக்கொள்கிறானே, அதற்காகவாவது சற்றே அப்படிக் கவனியுங்கள் ' என்றாள் அன்னை.

** ** **

"ஏன் ஊட்டியோ ஸிம்லாவோ வேண்டாம்? அம்பாளைக் கேட்கவில்லை?" என்று அதிசயப்பட்டான் ரகுபதி.

"பெண் ஜன்மம்தானே நான்? குறை சொல்லாமல் அலுத்துக்கொள்ளாமல் வாழ்ந்தேனாக்கும்! வியர்க்கவில்லை என்றாலும் என் உழைப்பு எங்கே போயிற்று என்று அந்த ஊட்டியிலும் மனக்குறை தோன்றும்! யாருக்குத் தெரிகிறது என் பாடு என்று வருத்தப்படுவேனோ என்னவோ! வியர்க்கக்கூடாதா என்று ஆசை வரக்கூடும்!" என்று பதிலளித்தாள் புவனா.

'நல்ல பெண்ணைப் படைத்தாய் கடவுளே!' என்று மனசுக்குள் சிரித்துக் கொண்ட ரகுபதி, "உன் காரியம் எப்படியோ; பேச்சு தலைகீழ்த்தனம்தான்' என்றான் மனைவியை விசித்திரமாகப் பார்த்து.

வாயைத் திறக்காமல் சிரித்துக்கொண்டிருந்தாள் புவனா. மறுத்து என்னமாகப் பேசுவாள்?

முன்னொரு நாள்: சாப்பாடெல்லாம் ஆன பிறகு 'காக்கைக்குப் போட மறந்தேனே!' என்றாள். மாமனார் தாழ்வாரத்திலிருந்தபடி, "காக்கா காக்கா, நாங்கள்ளாம் சாப்பிட்டாச்சு, நீ வா" என்று தமாஷ் பண்ணிவிட்டு, "போடேம்மா, இப்பத்தான்" என்றார். பிடி அன்னம் வழக்கம்போல் போட்டுவிட்டுக் கூசி நின்றாள் புவனா. வழக்கமாக வரும் காக்கைகளும் மாமரத்து அணிலும் வந்து போட்டியிட்டு உண்டு சென்றன. முன்னோ பின்னோ, காக்கைக்கு அன்னம் கிடைக்காமற் போகவில்லை என்ற திருப்தி உண்டாகிவிட்டது புவனாவுக்கு. மறதியால் போடாத சிறுமையையும் உடனே மறந்து போனாள். அத்தகைய அல்ப சந்தோஷியான பெண்ணாயிற்றே இந்த புவனா; கணவனின் கிண்டலுக்குக் கோவிப்பாளா?

முத்துப்போல் சிரிக்கிறாள்.

**********

(சுதேசமித்திரன், டிசம்பர் 1, 1957)